076201

சுருக்கம்

...துறை–சென்னை/கும்பகோணம், அரசு கவின்கலைக் கல்லூரி – நுண்கலைப் பட்டயப்படிப்பு சான்றிதழினை பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் நுண்கலை பட்டப் படிப்பிற்கு இணையாக கருதி – ஆணை வெளியிடப்படுகிறது.

சுற்றுலா மற்றும் பண்பாட்டு(பண்1–1)த் துறை

அரசு ஆணை(நிலை) எண்.190

நாள்.30.10.09
தி ஆ 2040, ஐப்பசி–13
படிக்கப்பட்டது.

1. ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–28, கடித எண்.3270/ஆ1/05, நாள் 30.6.05 மற்றும் 7.11.08.
2. அரசு கடித எண்.8357/பண்1–1/08–2, சுற்றுலா (ம)பண்பாட்டுத் துறை, நாள் 26.11.08
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடித எண்.1253/வி.ம.அது.ஊ1/06, நாள் 20.08.09.

---

ஆணை:

பார்வை 1ல் படிக்கப்பட்ட கடிதங்களில் கலை பண்பாட்டு ஆணையர், கலைப் பண்பாட்டுத் துறையினைச் சார்ந்து இயங்கும் சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் நுண்கலைக் கல்வியின் கீழ் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பு வகுப்புகள் தற்போது நடத்தப்பட்டு வருவதாகவும், சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் நடத்தப்படும் இவ்வகுப்புகள், சென்னை பல்கலைக்கழகத்தின் இணைவுடனும், கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரியில் நடத்தப்படும் வகுப்புகள் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இணைவுடனும் நடத்தப்பட்டு வருவதாகவும், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பயிற்சிக் குழுவின் (Courses Committee) பரிந்துரையின்படி, பல்கலைக்கழக ஆட்சிக் குழு (Syndicate) கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், அரசு கவின் கலைக் கல்லூரிகளில் முன்னர் வழங்கப்பட்ட பட்டயச் சான்றிதழ்கள், அப்பல்கலைக்கழகத்தின் பட்டத்திற்கு இணையானது என பல்கலைக்கழகங்களால் வழங்கப்பட்ட சான்றிதழுக்கு அரசின் ஒப்புதல் மற்றும் இசைவினை அளிக்குமாறு கோரியுள்ளார்.

2. பார்வை 3–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு அரசு பணித் தேர்வாணையம் சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரியினால் 1987–88 ஆம் ஆண்டிற்கு முன்னர் தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தினால் வழங்கப்பட்ட நுண்கலைப் பட்டயச் சான்றிதழ் Diploma in Fine Arts (Five Years course) படிப்பினை 1987–88ஆம் ஆண்டிற்கு பின்னர் சென்னை மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் நுண்கலைப் பட்டப்படிப்பிற்கு (Bachelor of Fine Arts) இணையானதாகக் கருதி, பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்காக அங்கீகரிக்கலாம் என 10.8.09 அன்று நடைபெற்ற இணைக்கல்வித் தகுதி நிர்ணய பரிசீலிப்பு குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, பரிந்துரைக்கப்படுகிறது எனத் தீர்மானம் (தீர்மான எண்.6ல்) நிறைவேற்றப்பட்டதாக தெரிவித்துள்ளது.

(தபிபா)

3. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் பரிந்துரையினை அரசு கவனமாக ஆய்வு செய்து, சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரியினால் 1987–88ஆம் ஆண்டிற்கு முன்னர் தொழில் இயக்ககத்தினால் வழங்கப்பட்ட நுண்கலைப் பட்டயச் சான்றிதழ் Diploma in Fine Arts (Five Years course) படிப்பினை 1987–88ஆம் ஆண்டிற்கு பின்னர் சென்னை மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் நுண்கலைப் பட்டப்படிப்பிற்கு (Bachelor of Fine Arts) இணையானதாகக் கருதி, பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்காக அங்கீகரிக்கலாம் என அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை உயர்கல்வி மற்றும் பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத் துறைகளின் அலுவல் சாரா குறிப்பு எண்.18038/B1/2009–1, நாள் 9.10.09 (ம) 48470/எல்.1/2009–1, நாள் 13.10.09–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ.இறையன்பு
அரசுச் செயலாளர்

பெறுநர்

ஆணையர்
கலை பண்பாட்டுத் துறை, சென்னை–28.
முதல்வர்,
அரசு கவின் கலைக் கல்லூரி,
சென்னை / கும்பகோணம்

நகல்

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–2
உயர் கல்வித் துறை, சென்னை–9.
பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்